[1978 மார்ச் 8

நான் இது சம்பந்தமாக முடிவு சொல்லும் வரையிலும் இக்கேள்வி சம்பந்தமான தகவல்கள் எதுவும் பத்திரிகையில் வெளிவரக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முடிவு சொல்லியாகி விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். அடுத்த கேள்வி 454.

மாஞ்சோலைத் தோட்ட தொழிலாளர் குடியிருப்புகள்.

*454 வினா—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட்டில் தொழிலாளர்களுக்கு வீடுகள் (Quarters) கட்டப்பட்டுப் பலகாலமாக மின் விளக்குப் போடப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) :—மின்விளக்கு வசதி இல்லாத வீடுகளுக்கு உடனடியாக மின்வசதி செய்து கொடுக்கும்படி மாஞ்சோலை தோட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே இந்த வீடுகளில் எல்லாம் வயரிங் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்குரிய டெப்பாசிட் எல்லாம் கட்டி பல மாதங்கள் ஆகிவிட்டது. பக்கத்தில் ஐந்து கிலோ தூரத்தில் கோதையாறு பவர் பிராஜக்ட் இருக்கிறது. ஆகவே இன்னும் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே இங்கு 54 வீடுகளுக்கு கம்பி இணைப்பு எல்லாம் கொடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. 30 வீடுகளுக்கு இன்னும் கொடுக்கப்பட வேண்டும். எல்லா வீடுகளுக்கும் செப்டம்பர் (1978) மாதத்திற்குள் இணைப்பு கொடுக்கப்பட்டு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.